RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt2224s222715

# கச்சிப்பேட்டு நன்னகையாரின் பிரிவுச் சார்ந்த செல்நெறிகள்

அ. வேளாங்கன்னி அமிர்தா [அ, *], ப. விமலா [அ]

[அ] முதுகலைத் தமிழியல் மற்றும் உயராய்வுத்துறை, செல்லம்மாள் மகளிர் கல்லூரி, கிண்டி, சென்னை-600032, தமிழ்நாடு, இந்தியா

# Kachippetu Nannakaiyar's Songs

A. Velankanni Amirtha [a, *], P. Vimala [a]

[a] PG and Research Department of Tamil, Chellammal Women's College, Guindy, Chennai-600032, Tamil Nadu, India

* Corresponding Author: velankanniamirtha@gmail.com

Received: 17-09-2022
Revised: 03-11-2022
Accepted: 08-11-2022
Published: 05-12-2022

## ABSTRACT

The writer's work reflects his society and environment. More than that his imagination and illustrations add beauty to the work. Among the Sangam literary works that sparkle with such beauty is Kurunthogai which contains four-hundred internal hymns. Kachippaettu Nannakaiyar is one of the women in this group. She has sung six songs related to the theme division. This essay examines how her literary style is shaped by the metaphors. The article is approached at four levels. In the first stage, the pathos of Kachippaettu Nannakaiyar are told through six songs. That is to say, her ethos is to prioritize practicality, to express the inherent psychology applicable to all periods, and to deal with natural metaphors as hes ethos. Secondly, it can be seen that her morals are consistent with the traditions of the sect. As a third stage, the woman feels the difference between the feelings of women's and men's separation are clearly explained. That means the songs of Kachippaettu Nannakaiyar are compared to the songs of Perungaduko who sang Palai thinai songs. The fourth stage is about Nannagaiyar who has written two sectarian songs in Kurunthogai. Since the essence of her concept and her name are the same, it is established that these two are one and the same. Analytical, descriptive and comparative research approaches are used in this article.

**Keywords:** Traditions of Sect, Actuality, Psychological Perspective, Environment and Behavior, Allegories and Nature

## முன்னுரை

ஐந்திணைக்குரிய உரிப்பொருட்களில் பிரிவும் பிரிவு சார்ந்த நிலையும் ஒன்றாகும். பிரிவுச் சார்ந்த ஆய்வுகள் காலந்தோறும் நிகழ்ந்து கொண்டேயிருக்கிறது. “சங்க இலக்கியத்தில் பிரிவு” என்று எஸ். செல்லையாபிள்ளை அவர்கள் முனைவர் பட்ட ஆய்வினை தொடர்ந்துள்ளார். “சங்க இலக்கியத்தில் காதல் மெய்ப்பாடுகள்” (1990) என்ற தலைப்பிலும் முனைவர் பட்ட ஆய்வினை மேற்கொண்டுள்ளனர். இத்தலைப்பில் பிரிவுக்கால மெய்பாடுகள் என்ற இயலும் ஒன்றாகும். முனைவர் பட்ட ஆய்வுகளைப் போல பிரிவாற்றாமையின் படிநிலைகள், குறுந்தொகை காட்டும் பாலை திணை சமூகம், சங்க பாடல்களில் பாலைத்திணை போன்ற ஆய்வுகளும் காலந்தோறும் நிகழ்ந்த வண்ணம் உள்ளது. அதிக பாடல்களைப் பாடிய குறிஞ்சி கபிலர், மருதம் ஓரம்போகியார், பாலை பாடிய பெருங்கடுங்கோ போன்ற புலவர்கள் குறித்து ஆய்வுகள் நிகழ்ந்துள்ளன. அதுவே மிக குறுகிய அளவில் பாடல்கள் பாடிய புலவர்களைப் பற்றி ஆய்வுகளானது மிகச் சிலவாகவே காணப்படுகிறது. அந்த வகையில் கச்சிப்பேட்டு நன்னகையாரின் பிரிவுச் சார்ந்த ஆறு பாடல்களை மையப்படுத்தியே

இக்கட்டுரை அமைகிறது. இக்கட்டுரையின்படி அவரின் செல்நெறியும் அவர் வாழ்ந்த சூழலும் சமூகமும் எவ்வாறு இருந்தது என்பதையும் இக்கட்டுரை ஆராய்கிறது.

## கச்சிப்பேட்டு நன்னகையாரின் செல்நெறிகள்

ஒவ்வொரு படைப்பாளனும் தான் கருதும் அல்லது தனக்கு நடக்கும் விஷயத்தை ஏதோ ஒரு ஊடகம் வாயிலாக இவ்வுலகில் பதிவு செய்ய நினைக்கிறான். அவ்வாறு பதிவு செய்யும் முறைகளுக்கு ஒவ்வொருவரும் ஒவ்வொரு நெறிமுறைகளை கையாளுகின்றனர். கச்சிப்பேட்டு நன்னகையாரின் செல்நெறியானது நடப்பியலாகவும், இயல்பான உவமைகளை கையாள்வதாகவும், உளவியலை வெளிப்படுத்துவதாகவும் அமைகிறது.

## நடப்பியல்

நடப்பியல் என்பது அன்றாடம் வாழ்வில் நடக்கக்கூடிய உண்மை நிகழ்வுகள் ஆகும். இதனை எதார்த்தம் எனவும் கூறலாம்.

“நிலத்தினும் பெரிதே; வானினும் உயர்ந்தன்று

நீரினும் ஆரளவு இன்றே, சாரல்”

என்ற வரிகள் காதலின் உன்னதத்தை கூறினாலும் மிகைப்படுத்துவதாக அமைகிறது (Subramanian, 2007). அதாவது நிலத்தை விட பெரியது என்பது நிலத்தை விட பெரிய பொருளை நாம் கண்டது கிடையாது ஆனால் அதைவிட பெரியதாக என்னுடைய காதல் இருக்கிறது என தலைவி கூறுகிறாள். ஆனால் கட்சிப்பேட்டு நன்னகையார் ஒரு எதார்த்த நோக்கில் தன் படைப்பைப் படைக்கிறார். தான் என்ன கண்டாரோ அல்லது தனக்கு என்ன நேர்ந்ததோ அதை நடப்பியலோடு மிக அழகாக எடுத்துக்காட்டுகிறார்.

“தாஅவல் அஞ்சிறை நொப்பறை வாவல்

பழுமரம் படரும் பையுள் மாலை,

எமியம் ஆக ஈங்குத் துறந்தோர்

தமியர் ஆக இனியர் கொல்லோ?

ஏழ்ஊர்ப் பெதுவினைக்கு ஓர்ஊர் யாத்த

உலைவாங்கு மிதித்தோல் போலத்

தலைவரம்பு அறியாது வருந்தும்என் நெஞ்சே”

என்ற பாடல் தலைவியின் தனிமை துயரத்தை உணர்த்துவதாக அமைகிறது (Subramanian, 2007). தலைவனின் பிரிவால் வாடும் தலைவி தோழியைப் பார்த்து மாலை நேரத்தில் பழுத்த மரங்களை நோக்கி வவ்வாலானது பறந்துச் செல்கிறது. ஆனால் நான் மட்டும் தலைவன் இல்லாமல் தனியே வாடுவது ஏனோ என கேள்வி கேட்கிறாள். மேலும் ஏழு ஊருக்கும் பொதுவாக அமைந்துள்ள ஒரு கொல்லன் உலையில் அவனது மிதித்தோல் எவ்வாறு தொடர்ந்து உழைத்து களைப்படையுமோ அதுபோலவே என் நெஞ்சமானது வருந்துகிறது. இப்பாடலில் இயல்பாக நடக்கும் ஒரு நடப்பியலானது காணப்படுகிறது.

## உளவியல்

உளவியல் என்பது உள்ளார்ந்த விஷயத்தை அறிதலாகும். “உள்ளத்தின் வாழ்க்கையைப் பற்றியதோர் அறிவியலே உளவியல்”? என்று வில்லியம் ஜேம்ஸ் (4/11/1887) கூறுகின்றார். உள்ளம் எனும் தொடர் பல்வேறு விகிதங்களில் வரையறுக்கப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் அதனை

நினைவிருத்தல் என்று குறிப்பிட்டனர். இடைக் காலத்தில் அதனை ஓர் நினைவின் துறையாக கொண்டனர், ஆனால், பொதுவாக உள்ளம் கனவு நிலை அல்லது சிந்தனையின் இருப்பிடமாக வரையறுக்கப்பட்டுள்ளது".

கச்சிப்பேட்டு நன்னகையாரின் பாடலில் இத்தகைய உளவியல் தன்மையை நாம் காணலாம். ஒருவரைப் பற்றி அதிகமாக நினைக்கும் போதோ அல்லது அவர்களின் பிரிவால் வருந்தும் போதோ அவர்கள் நம் நினைவலைகளான கனவுகளில் வருவது இயல்பே. அத்தகைய இயல்பை கச்சிப்பேட்டு நன்னகையார்,

"கேட்டிசின் வாழி தோழி அல்கற்

பொய்வ லாளன் மெய்யுறல் மரீஇய

வாய்த்தகைப் பொய்க்கனா மருட்ட ஏற்றெழுந்து

அமளி தைவந் தனனே குவளை

வண்டுபடு மலரிற் சாஅய்த்

தமியேன் மன்ற அளியேன் யானே."

என்ற பாடல் வழி எடுத்துரைக்கிறார் (Subramanian, 2007). உளவியல் செய்தியுடன் தலைவியின் வருத்தத்தையும் கூறுவதாக அமைகிறது இப்பாடல். தலைவனின் பிரிவால் வாடும் தலைவி தலைவனையே நினைத்துப் படுத்திருக்க தலைவன் தலைவியை வந்து அணைத்ததைப் போல தலைவி உணர்கிறாள். திடீரென்று கனவில் இருந்து வெளிப்பட்டவளாய் தனது படுக்கையைத் தடவிய போது அங்கு தலைவன் இல்லை. வெறும் தலையணை மட்டுமே இருந்தது. இத்தகையச் செய்தியை தன் தோழியிடம் கூறுகிறாள்.

இதில் எக்காலத்துக்கும் பொருந்தும் ஒரு உளவியலானது வெளிப்படுகிறது. இரண்டாயிரம் ஆண்டுகள் கடந்தும் கூட இன்றும் காதல் கொள்ளும் பெண் அல்லது பிறர் மேல் அதிக விருப்பத்தில் இருக்கும் பெண் கனவில் அவர்கள் வருவதும் அப்பெண் அதை உண்மை என நினைப்பதும் இயல்பாக நடந்து கொண்டிருக்கக் கூடிய ஒன்றாகக் காணப்படுகிறது. தான் உணரும் உள்ளார்ந்த விஷயத்தை தனக்கே உரிய எதார்த்தத்தோடு இதில் கச்சிப்பேட்டு நன்னகையார் பதிவுச் செய்கிறார்.

## இயற்கையும் உவமையும்

பொருளின் சிறப்பைச் சுட்டிக்காட்ட வேறொரு பொருளானது தேவைப்படுகிறது அப்பொருளே உவமை எனப்படுகிறது.

"சங்க இலக்கியத்தில் பெண்பாற் புலவர்கள் உவமையினை இயற்கைப் பொருட்களோடும், பண்பாட்டோடும், பழமொழியோடும், நடைமுறைப் பழக்கவழக்கங்களோடும் ஒப்புமைப்படுத்திக் கருத்தை வெளிப்படுத்தியுள்ளனர். உவமையணியே எல்லா அணிகளுக்கும் தாய் போன்றது. இதிலிருந்துதான் பிற அணிகள் உருவாக்கப்பட்டன எனலாம். சங்க இலக்கியங்களில் உவமைகள் வெறும் சொல்லலங்காரமாக இல்லாமல் கருத்திற்கேற்ப எடுத்தாளப்பட்டுள்ளன." (Jeya, 2003)

என்பதற்கேற்ப கச்சிப்பேட்டு நன்னகையார் பாடல்கள் அமைகின்றன. தலைவியின் துயர நிலையை வெளிப்படுத்த கச்சிப்பேட்டு நன்னகையாரின் பாடல்களில் உவமை கையாளப்பட்டுள்ளது. தலைவன் கூறிச் சென்ற கார்காலம் வந்த பிறகும் தலைவன் வராததை எண்ணித் தலைவியானவள்,

"யாதுசெய் வாங்கொல் தோழி நோதக

நீரெதிர் கருவிய காரெதிர் கிளைமழை

ஊதையங் குளிரொடு பேதுற்று மயங்கிய

கூதிர் உருவிற் கூற்றம்

காதலர்ப் பிரிந்த எற்குறித்து வருமே." (Subramanian, 2007)

என்ற பாடல் வழி தன் தனிமை துயரை உணர்த்துவதாக கச்சிப்பேட்டு நன்னகையார் அமைக்கிறார். அதாவது தலைவனைப் பிரிந்து வாடும் தலைவியைத் தனிமை என்னும் துயரானது வருத்துகிறது. மேலும் கார்காலம் கூற்றுவனைப் போல கருத்த மேகங்களுடன் இடி மின்னல் போன்றக் கருவிகளுடன் தலைவியின் உயிரை பறிப்பதற்கு வருவதாக இப்பாடல் அமைகிறது.

இயல்பான உவமைகளைக் கையாள்வது போல உவமைக்கு உவமை கூறும் விதமும் கச்சிப்பேட்டு நன்னகையாரிடம் காணப்படுகிறது. அதாவது ஏதாவது ஒரு பொருளை உவமைப்படுத்துவதற்கு முன்பு அந்த பொருளுக்கு உவமைக் கூறப்படுகிறது. உதாரணமாக

"அம்ம வாழி தோழி காதலர்

இன்னே கண்டுந் துறக்குவர் கொல்லோ

முந்நாற் றிங்க ணிறைபொறுத் தசைஇ

ஒதுங்கல் செல்லாப் பசும்புளி வேட்கைக்" (Subramanian, 2007)

இப்பாடலில் பல நீர்த்துளிகள் சேர்ந்தக் கருமேகத்தை உவமைப்படுத்த முயல்கிறார். அந்த மேகமானது கருவுற்ற பெண்ணின் வயிற்றைப் போல் காணப்படுகிறது என்று கூறுகிறார். கருவுற்ற பெண்ணின் வயிறானது பன்னிரு நாள் நிலவு எப்படி முழுமையும் அடையாமல், முழுமையடையும் பருவத்தில் எப்படி இருக்குமோ அப்படி இருந்தது என அப்பெண்ணின் வயிற்றுக்கு உவமை கூறி அப்பெண்ணின் வயிற்றை போல் கருமேகம் காணப்படுகிறது எனக் கூறுகிறார். உவமை கூறுவதில் இத்தகைய நெறியையும் கச்சிப்பேட்டு நன்னகையார் பயன்படுத்துவதை அறிய முடிகிறது.

## பிரிவுக்கால மரபுகள்

பிரிவு என்பது ஒருவரை நாம் விட்டு பிரிந்து செல்லுதல் அல்லது நம்மை விட்டு அன்பு கொண்டவர்கள் பிரிந்து செல்வது ஆகும். தலைவனும் தலைவியும் கற்பு வாழ்வை மேற்கொள்ளும் போது பல வகையான பிரிவு நிலைகளானது ஏற்படுகிறது. இத்தகைய பிரிவு குறித்து நம்பியகப்பொருள்,

"இல்வாழ்க் கையே பரத்தையிற் பிரிவே

ஓதற் பிரிவே காவற் பிரிவே

தூதிற் பிரிவே துணைவயிற் பிரிவே

பொருள்வயிற் பிரிவெனப் பொருந்திய ஏழும்

வளமலி கற்பின் கிளவித் தொகையே."

என்ற நூற்பாவில் தெளிவுப்படுத்துகிறார் (Thirunanasambantham, 2010). அதாவது தலைவன் தலைவியை விட்டு ஆறு நிலைகளில் பிரிவதாக நம்பியகப்பொருள் கூறுகிறது. தலைவன் தலைவியை விட்டு பரத்தையர் பொருட்டுப் பிரியும் போது மட்டுமே தலைவியானவள் வருத்தம் கொள்ளாமல் சினம் கொள்கிறாள். மற்ற அனைத்து பிரிவுகளிலும் தலைவனை நினைத்து தலைவி வருந்துகிறாள். அவ்வாறு தலைவன் தலைவியை விட்டு பிரியும்போது தலைவி அடையக்கூடிய துயர் நிலைகளை பல சங்க இலக்கியப் பாடல்கள் நமக்கு தெளிவுப்படுத்துகின்றன. அவ்வாறு சங்க இலக்கியங்கள் உணர்த்தும் பாடல்களைக் கொண்டே பிரிவுக்கால மரபுகளை நாம் உணர்ந்து கொள்ள முடியும்.

- தலைவன் பிரிந்து சென்றால் தலைவி வருந்துவாள் எனத் தலைவனே செலவை அழுங்குவித்தல்.
- பிரிந்து செல்ல மாட்டேன் என உறுதிக் கூறிய தலைவன் பிரிவதற்காக தலைவி துயரப்படுதல்.
- தலைவி தலைவன் சென்ற பாதைகளை நினைத்து வருத்தப்படுதல்.
- தலைவி தலைவனுடன் இருந்த நினைவுகளை எல்லாம் நினைவுபடுத்தி வருந்துதல்.

- தலைவி தூங்காமல், உணவு உண்ணாமல் உடல் முழுவதும் பசலை நோய் படர்தல்.
- தலைவன் கூறும் கார்காலம் வந்தும் தலைவன் வராததை நினைத்து தலைவி வருந்துதல்.
- தலைவன் பிரிந்து சென்ற ஊரில் என்னை நினைவு படுத்தும் பொருட்கள் ஏதும் இல்லையா என நினைத்து வருந்துதல்.
- தலைவனுக்காக கார்காலத்தையே மறுக்கும் அளவிற்கு தலைவன் மேல் நம்பிக்கை கொள்ளுதல்.

போன்றவையெல்லாம் தலைவன் தலைவி இடையே ஏற்படும் பிரிவு காலத்தில் காணப்படும் உணர்வுகளாக சங்க இலக்கியத்தில் மிளிர்கின்றன. இத்தகைய மரபுகளை கச்சிப்பேட்டு நன்னகையாரின் பாடல்களிலும் காணலாம்.

"பழூஉப்பல் அன்ன பருஉகிர்ப் பாஅடி

இருங்களிற்று இனநிறை ஏந்தல் வரின்மாய்ந்து,

அறைமடி கரும்பின் கண்இடை அன்ன,

பைதல் ஒருகழை நீடிய சுரன்இறந்து,

எய்தினர் கொல்லோ பொருளே அல்குல்

அவ்வரி வாடத் துறந்தோர்

வன்பர் ஆகத்தாம் சென்ற நாட்டே?" (Subramanian, 2007)

என்ற பாடல் தலைவன் பிரிந்து சென்ற பாதையின் கொடுமையைக் கூறுகிறது. இப்பாடல் தோழிக் கூற்றாக அமைகிறது. பொருள்வயிற் பிரிந்துச் சென்ற தலைவனை நினைத்து தலைவி வருத்தப்பட்டுக் கொண்டிருக்கிறாள். அத்தலைவியை தேற்றும் விதமாக தோழியானவள் தலைவன் சென்ற வழியின் கொடுமையைக் கூறுகிறாள். அவ்வழியானது பேய் போன்ற நகங்களைக் கொண்ட தலைமை யானை பாதத்திற்கு அடியில் சிக்கிய கரும்புகளைப் போல் பொலிவிழந்த மூங்கில்கள் மட்டும் காணப்படும் பாலை நிலத்தின் வழியே கடந்துச் சென்றார். அவர் சென்ற காரியம் முடிந்ததோ? முடியவில்லையோ? என்று தலைவியைத் தேற்றுபவளாகத் தோழியிருக்கிறாள்.

இப்பாடலில் தலைவனுக்காக காத்துக் கொண்டிருக்கும் தலைவியிடம் தோழி தலைவன் பல துயரங்களைக் கடந்து தன் வினையின் காரணமாகச் சென்றிருக்கிறான். நிச்சயம் வினை முடிந்தவுடன் திரும்புவான் என்றுக் கூறி தேற்றுகிறாள். இதேப் போல் தலைவி தலைவனை இடைவிடாது நினைத்துக் கொண்டு வருந்துகிறாள். கார்காலம் வந்ததும் தலைவன் வருவான் என நினைத்த தலைவி தலைவன் வராத எண்ணி கார்காலத்தை,

"ஈங்கே வருவர் இனையல் அவர் என

அழாஅற்கோ இனியே? நோய்நொந்து உறைவி!

மின்னின் தூவி இருங்குயில் பொன்னின்

உரைதிகழ் கட்டளை கடுப்ப மாச்சினை

நறுந்தாது கொழுதும் பொழுதும்

வறுங்குரற் கூந்தல் தைவரு வேனே" (Subramanian, 2007)

எனத் தலைவிக் கூறுவதாக இப்பாடலை கச்சிப்பேட்டு நன்னகையார் அமைக்கிறார். முன்னொரு காலத்தில் தலைவி தலைவனுடன் இருந்த நினைவுகளை நினைத்துப் பார்த்து வருந்துகிறாள். தற்போது தன்னுடன் தலைவன் இல்லையே என வருந்தும் என்னை ஊரார் ஆற்றியிருக்கச் சொல்வது எங்கனம் என தோழியைக் கேட்பதாகத் தன் வருத்தத்தின் மிகுதியை வெளிப்படுத்துகிறாள் தலைவி. இவ்வாறு அன்றைய பிரிவுக்கால மரபுகளை பின்பற்றியதாகவே கச்சிப்பேட்டு நன்னகையார் பாடல்கள் அமைந்துள்ளன.

## ஆண்பாற் பெண்பாற் புலவர்கள் காதலை பதிவு செய்யும் விதம்

சங்க இலக்கியங்கள் பெரும்பான்மையாக தோழிக் கூற்றாகவும் தலைவிக் கூற்றாகவும் அமைகிறது. ஆனால் பாடியப் புலவர்கள் எனும் அடிப்படையில் ஆண்பாற் புலவர்களே பெண்பாற் புலவர்களைக் காட்டிலும் அதிகம். ஒரு பெண்ணின் உணர்வுகளை ஒரு ஆண் உணர்ந்து வெளிப்படுத்துவதற்கும் ஒரு பெண் தானே தன் உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கும் பல வேறுபாடுகள் இருக்கின்றன. பிரிவை உணர்த்தும் விதத்தில் பல பாடல்களைப் பாடிய பாலைப் பாடிய பெருங்கடுங்கோ,

“உள்ளது சிதைப்போர் உளரெனப் படாஅர்

இல்லோர் வாழ்க்கை இரவினும் இளிவெனச்

சொல்லிய வன்மை தெளியக் காட்டிச்

சென்றனர் வாழி தோழி யென்றும்

கூற்றத் தன்ன கொலைவேல் மறவர்

ஆற்றிருந் தல்கி வழங்குநர்ச் செகுத்த

படுமுடை பருந்துபார்த் திருக்கும்

நெடுமூ திடைய நீரில் ஆறே.” (Subramanian, 2007)

இந்தப் பாடல் வழி தலைவன் தலைவியின் துயரை பாலைப் பாடிய கடுங்கோ கூறுகிறார். அதாவது பொருள்வயிற் பிரிந்துப் போனத் தலைவனை நினைத்துத் தலைவி வருந்துகிறாள். தன்னிடம் இருக்கக்கூடிய செல்வத்தை வைத்து வாழுதல் இழிவானது. எனவே ஒவ்வொருவரும் பொருள் தேடி வாழ வேண்டும் என்ற நோக்கில் தலைவன் பொருள் தேடிக் கொடிய வழியில் சென்றுள்ளான். அவன் வாழ்க என தலைவி வாழ்த்துவதாக பாடல் அமைகிறது. தன் துயரையும் நினையாது தலைவன் பிறர் அறநெறிக்காகக் கொடியப் பாதைகளைக் கடந்துப் பொருள் தேடச் சென்றுள்ளான் என்ற கருத்து தலைவியின் துயரை மட்டுமல்லாமல் சமுதாயத்தை உணர்த்துகிறது. இப்பாடலில் தலைவித் துயர் ஒருங்கே வெளிப்படுவதுடன் அக்கால சமுதாயப்போக்குத் தான் அதிகமாக வெளிப்படுகிறது.

“பைதல் ஒருகழை நீடிய சுரன்இறந்து

எய்தினர் கொல்லோ பொருளே,” (Subramanian, 2007)

“ஊதையங் குளிரொடு பேதுற்று மயங்கிய

கூதிர் உருவிற் கூற்றம்

காதலர்ப் பிரிந்த எற்குறித்து வருமே” (Subramanian, 2007)

“பொய்வ லாளன் மெய்யுறல் மரீஇய

வாய்த்தகைப் பொய்க்கனா மருட்ட ஏற்றெழுந்து

அமளி தைவந் தனனே குவளை” (Subramanian, 2007)

என்றக் கச்சிப்பேட்டு நன்னகையாரின் பாடல்கள் அனைத்திலும் சமுதாய நோக்கு இல்லை. அக்கால சமுதாயத்தை வெளிப்படுத்துவதை விட தலைவியின் தனிமைத் துயரை வெளிப்படுத்த வேண்டும் என்றே அவரின் பாடல்கள் அமைக்கின்றன. ஆண், பெண்ணாகத் தன்னை உணர்ந்து கொள்ளும் போது கூடத் தன் வாழக்கூடிய சமுதாயத்தை ஏதாவது ஒரு வகையில் பதிவுச் செய்ய வேண்டும் என்ற நோக்கே மேலோங்கிக் காணப்படுகிறது. ஆனால் ஒரு பெண் பிரிவுத் துயரைச் சந்திக்கும் ஒவ்வொரு தருணத்திலும் அந்த பிரிவின் வலியும் வேதனையும் தான் அதிகமாகிறது. அதைத்தான் கச்சிப்பேட்டு நன்னகையார் பாடல்களில் நாம் காண்கிறோம்.

தலைவி நெஞ்சமானது ஏழு ஊர்களுக்கும் ஒரே கொல்லன் ஒரு மிதித்தோலை எவ்வாறு இடைவிடாது பயன்படுத்துவானோ அதை போல் தலைவன் இல்லாமல் வருந்துகிறது. தலைவன் இல்லாத அந்த மாலைக்காலத்தை தலைவன் இருந்த மாலைக்காலத்துடன் இணைத்து அதை நினைத்து வருந்தக்கூடிய நிலையில் தலைவி இருக்கிறாள். மேலும், தலைவி தலைவன் சென்ற வழியானது வெறும் பொலிவிழந்த மூங்கில் மரங்கள் மட்டுமே நிறைந்த கொடிய பாலை வழியில் சென்றுள்ளாரே எனத் தலைவனுக்காக வருந்துகிறாள்.

இப்பாடல்களின் வழியே ஒரு பெண்ணின் உணர்வும் எதார்த்தமும் எந்த ஒரு ஆணும் எதார்த்தமாகப் புரிந்துக் கொண்டுப் பாடல்களில் பதிவுச் செய்ய முடியாது. அப்படியே அவர் அந்த எதார்த்த உணர்வை புரிந்துக் கொண்டாலும் தான் வாழும் சமுதாயத்தோடு அதை பதிவுச் செய்வாரேத் தவிர ஒரு பெண்ணாகவே அப்பாடல்களைப் பதிவுச் செய்தல் என்பது மிகவும் அரிதாக உள்ளது என்பது புலனாகிறது.

## கச்சிப்பேட்டு நன்னகையாரும் நன்னகையாரும்

குறுந்தொகையில் நன்னகையார் என்றப் புலவர் பெயரில் பிரிவுச் சார்ந்த மேலும் இரு பாடல்கள் அமைந்துள்ளது. இந்த இரு பாடல்களை ஒப்பு நோக்கும் போது கச்சிப்பேட்டு நன்னகையாரின் பாடல்களைப் போலவே காணப்படுகிறது. நன்னகையார் வேறொரு பெண்பாற் புலவர் என்ற கருத்து நிலவுகிறது. இவ்விரு பெண்பாற் புலவர்கள் என்ற நிலையில் இவர்களின் கருத்தானது ஒருமித்தமாகவும், இவரின் பெயரும் ஒன்றாக இருப்பதன் காரணமாகவும் இவ்விருவரும் ஒருவரே என்று கூறப்படுகிறது.

"புள்ளும் மாவும் புலம்பொடு வதிய

நள்ளென வந்த நாரில் மாலைப்

பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர்

வருவீர் உளீரோ எனவும்

வாரார் தோழிநங் காத லோரே." (Subramanian, 2007)

என்ற பாடல் நன்னகையாரின் பிரிவுச் சார்ந்தப் பாடலாகும். இப்பாடலில் தலைவியானவள் தலைவனைப் பிரிந்து வாடுகிறாள். தலைவனின் வரவை எதிர்நோக்கி இருக்கும் தலைவி ஊர்களுக்கு ஒன்றானக் கதவினை மூடும் போது யாராவது ஊருக்குள் வரக்கூடியவர்கள் உள்ளீர்களா என கேட்பர். அவ்வாறு கேட்கும் போது கூட தலைவன் வரவில்லை என்று நினைத்து வருத்தப்படுகிறாள்.

கச்சிப்பேட்டு நன்னகையாரின் ஆறு பாடல்களும் தலைவன் இல்லாது தலைவிப் படக்கூடிய வருத்தத்தைப் பல இடங்களில் மிக இயல்பாகப் பதிவு செய்து செல்கிறார். இவர்கள் இருவரும் எடுத்துக் கொண்ட கருப்பொருளும் ஒன்றே இவர்கள் பயன்படுத்தும் உணர்வுகளும் ஒன்றே இவர்கள் பேரும் ஒரே மாதிரி இருப்பதன் காரணமாக இவ்விரு பெண்பாற் புலவர்களும் ஒருவரே எனவும் அவர்களின் செல்நெறிக் கொண்டு கூறப்படுகிறது.

## முடிவுரை

கச்சிப்பேட்டு நன்னகையார் என்ற பெண்பாற் புலவரின் செல்நெறியானது மிகவும் நடப்பியலாகவும், இயல்பான உவமைகளை கையாள்வதாகவும், உவமைக்கு உவமை கூறக்கூடிய தன்மையும், உளவியல் சார்ந்ததாகவும் இருப்பது அறியப்படுகிறது. இவரது பாடல்களைக் கொண்டு இவர் கணவர் பொருள் வயிற் பொருட்டு இவரை பிரிந்து சென்றுள்ளார். அதன் பொருட்டு இவர் பல பிரிவு பாடல்களை எழுதியுள்ளார் என்பதும் அறியப்படுகிறது. கச்சிப்பேட்டு நன்னகையார் நன்னகையார் என்ற இரு பெண்பாற்புலவர்களும் ஒருவரே என்று அவர்களின் செல்நெறி கொண்டு இக்கட்டுரை நிறுவுகிறது. இவர் பாடல்களின் மூலம் அன்றைய காலத்தில் ஏழு ஊர்கள் சேர்ந்தது ஒரு

அமைப்பாகவோ அல்லது மன்றமாகவோ இருந்திருக்கலாம் என்றும் அறிந்து கொள்ள முடிகிறது. இவர் கார்மேகத்தின் தன்மைக்கு கருவுற்ற பெண்ணின் தன்மையை ஒப்புமை கூறுகிறார். மேலும் அப்பெண்ணின் வயிற்றுக்கு 12 நாள் நிலவு எனக் கூறுவதின் வாயிலாக இவரின் வானியல் அறிவானது புலப்படுகிறது.

## References

Jeya, V. (2003) Sangap Penpar Pulavargalin Molikalum Karuthum, International Institute of Tamil Studies, Chennai, India.

Subramanian, S.V. (2007) Sanga Ilakiyam, Manivasagar Pathippagam, Chennai, Tamil Nadu, India.

Thirunanasambantham, S. (2010) Nambiyagapporul, Kathir Pathippagam, Thiruvaiyaru, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License